ஸ்ரீதந்வந்தரயே நம:

# வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல முகப் பத்திரிகை.


ஸௌமிய
மாசி

MARCH
1970





தொகுதி 32
பகுதி 3

Vol. 32
No. 3



ஆசிரியர் :
வைத்ய வாசஸ்பதி பண்டிட் P. S. ராம சர்மா,

பிரசுரகர்த்தா :
வைத்ய T. S. ஈச்வரன், L. I. M.



| | |
|---|---|
| மம்மி | 65 |
| வல்மீகார்புதங்களும் புற்றுநோயும் | 67 |
| தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம் நிர்வாஹ ஸமிதிக்கூட்டம் | 71 |
| ஆமவாதத்தில் ஆமதோஷத்தின் விளக்கம் | 72 |
| ஸஹஸ்ரயோகம் | 77 |



வருஷச் சந்தா
ரூ. 5/-

Annual
Subscription
Rs. 5/-

கார்யாலயம்: 27, சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

# வைத்யரத்னம் P. S. வாரியருடைய
# ஆர்ய வைத்தியசாலா

## கோட்டக்கல். (கேரள ராஜ்யம்)

*ஸ்தாபிதம்: 1902.*

**Registered** THE ARYA VAIDYA SALA KOTTAKAL **Trade Mark.**

தலைமை ஆபீஸ் போன்; கோட்டக்கல் எக்ஸ்சேஞ்ஜ்

தலைமை அலுவலகம், (மானேஜிங் டிரஸ்டி-மானேஜருடன் தொடர்புள்ளது.) போன் எண் 31

நர்ஸிங்ஹோம் (போன்) 44
பிரதான வைத்யர் (போன் 25)
மானேஜிங் டிரஸ்டி (வீடு) (போன் 27)
மானேஜர் (வீடு) (போன் 26)

**சென்னை கிளை:**

No. 1, கிருஷ்ணமாசாரி ரோடு,
நுங்கம்பாக்கம், சென்னை 34. போன் எண் 811275

**மற்ற கிளைகள்:**

1. கோழிக்கோடு (போன் 2155)
2. பாலக்காடு (போன் 104)
3. பாலக்காடு ஸேல்ஸ் டிபோ (போன் 584)
4. ஆல்வாய்
5. ஈரோடு (போன் 172)
6. திரூர் (போன் 31)
7. எர்ணகுளம் (போன் 33026)
8. திருவனந்தபுரம் (போன் 3924)

மற்றும் நூறு அங்கீகரித்த ஏஜன்ஸிகளும், டெபோக்களும்

சுத்தமானதும், உயர்தரமானதுமான ஆயுர்வேத மருந்துகளும், உயர்ந்த வைத்ய ஆலோசனைகளும் எமது தலைமை ஆபீஸிலும், கிளைகளிலும் கிடைக்கும். எமது தலைமை வைத்யரால் கடிதமூலமாக வைத்ய ஆலோசனைகள் அளிக்கப்படும். நவரைக்கிழி, பிழிச்சல் முதலிய விசேஷ சிகித்ஸைகள் தலைமை வைத்யர் மேற்பார்வையில் எமது கோட்டக்கல் **கோல்டன் ஜூபிலி நர்ஸிங்ஹோமில்** நடத்தப்பெறும்.

**மானேஜிங் டிரஸ்டி.**

# திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் பிரைவேட் லிமிடெட்.,

[ஸ்தாபிதம் 1939.]

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ் :
28, A. தென்னூர் ரோடு,
திருச்சிராப்பள்ளி-1.
Phone No. 3660

விற்பனை டிப்போ :
31, சின்னக் கடைத்தெரு,
திருச்சிராப்பள்ளி-2
Phone No. 4202

வைத்தியர்களுக்குத் தேவையான எல்லா சிறந்த ஆயுர்வேத மருந்துகளும் சாஸ்திரீய ரீதியில் தகுந்த நிபுணர்கள் மேற்பார்வையில் தயாரிக்கப் பெறுகின்றன.

வைத்தியர்களுக்கென விசேஷச் சலுகையுடன் குறைந்த விலையில் மொத்தமாகவும், சில்லரையாகவும் மருந்துகள் கிடைக்கும்.

## எமது விசேஷ புத்தக வெளியீடு-1.

எமது ஸ்தாபனத்தில் தயாராகும் மருந்துகளின் செய்முறையை விளக்கும்

## ஔஷத யோக ஸங்கிரஹம்

முதல் பாகம்

பிரதி விலை ரூ. 6-00. தபால் செலவு தனி.

விசேஷ விபரங்களுக்கு நேரில் எழுதித் தெரிந்து கொள்ளவும்

T. S. ஈச்வரன், L.I.M. மானேஜிங்டைரக்டர்.

GRAM: KALIA

Phone: { Off. 3232 / Res. 4343

# KALIA BROTHERS (Regd.)

INDIAN DRUGS MERCHANTS

JULLUNDUR CITY. (INDIA)

| Price List | | Rs. ps. |
|---|---|---|
| Pure Musk per gram | | 50-00 |
| Pure Saffron | | 2-50 |
| Pure Gorochanam per gram | | 6-50 |
| Pure Pearls Spl. | ,, | 10-00 |
| ,, No. 2 | ,, | 7-00 |
| ,, No. 3 | ,, | 4-00 |
| Pure Ambar No. 1 | ,, | 3-50 |
| ,, No. 2 | ,, | 2-50 |
| ,, No. 3 | ,, | 2-00 |
| Pure Silver Leaves | ,, | 0-80 |

## PACHAKARPURAM

| | | |
|---|---|---|
| Spl. Bhimseni per gram | | 0-30 |
| Singapuri (Yellow) | ,, | 0-25 |
| German or Japan | ,, | 0-20 |
| Powder Pachakarpuram | | 0-06 |
| Pure Menthol | ,, | 0-45 |
| Pure Thymol | ,, | 0-20 |
| Ashtavargam | per Kilo | 7-50 |
| Jiwak Rishwak | ,, | 2-50 |
| Meda Mahameda | ,, | 8-00 |
| Kakoli Kshir Kakoli | ,, | 8-00 |
| Ridhi Vridhi | | 12-00 |
| Silajit (Kalmodam) | | |
| Suryatapi Silajit No. 1 | ,, | 100-00 |
| No. 2 | ,, | 85-00 |

## CRUDE DRUGS

| | | |
|---|---|---|
| Attis Bitter | ,, | 80-00 |
| Beedana | ,, | 20-00 |
| Guggulu Shudh | ,, | 12-00 |
| Gowela | ,, | 60-00 |

| Price List | | Rs. Ps. |
|---|---|---|
| Kuth No. 1 | per Kilo | 5-00 |
| Moosli White | ,, | 15-00 |
| Pushkar mool | ,, | 5-00 |
| Rose Flower Dry | ,, | 10-00 |
| Som Lata | ,, | 10-00 |
| Salib Panja | ,, | 85-00 |
| Salib Gatha | ,, | 20-00 |
| Shingraf | ,, | 300-00 |
| Tiger's Fat | ,, | 45-00 |
| Bears Fat | ,, | 40-00 |
| Pure Vanslochan | ,, | 80-00 |

## AYURVEDIC MEDICINE

| | | |
|---|---|---|
| Chander Prabha | per Kilo | 70-00 |
| Chavan prash | ,, | 10-00 |
| Gudoochi Sattoo (Sindi Maw) | ,, | 12-00 |
| Ras Sindur | ,, | 300-00 |
| Shudh parad | ,, | 300-00 |
| Swaran Vang | ,, | 200-00 |
| Yogaraj Guggulu | ,, | 30-00 |
| Kaishore ,, | ,, | 30-00 |
| Maha Yogaraj ,, | ,, | 140-00 |
| Abrak Bhasam | ,, | 200-00 |
| KantLoh Bhasam | ,, | 85-00 |
| Loh Bhasam Special | ,, | 150-00 |
| Shring Bhasam | ,, | 35-00 |
| Sankh Bhasam | ,, | 30-00 |
| Mandur Bhasam | ,, | 35-00 |
| Silajit Bhasam | ,, | 35-00 |
| Silver Bhasam | ,, | 700-00 |
| Swaran Makshik | ,, | 80-00 |
| Sulphur Purified | ,, | 50-00 |
| Tamber Bhasam | ,, | 300-00 |
| Sidh Makar Dhwaj | per gram | 4-20 |
| Makar Dhwaj ordinary | | 0-80 |

**Please ask for detailed Price List 6¼% Commission to the readers of Vaidya Chandrika**

தந்தி: "அம்ருதம்" P. B. No. 1382. போன்: 26006

# ஆர்ய வைத்திய பார்மஸி

(கோயமுத்தூர்) லிமிடெட்.,

தலைமை ஆபீஸ்: 366, திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18

THE ARYA VAIDYA PHARMACY (COIMBATORE) LTD. AVP

**உண்மையான ஆயுர்வேத மருந்துகளுக்கும் சிகிச்சைகளுக்கும் சிறந்த இடம்.**

எங்களுடைய கிளைகள்:

| | | | |
|---|---|---|---|
| 1. புது டில்லி : | 23 B, பூஸா ரோடு, | போன் ; | 585687 |
| 2. மதராஸ் 14 : | கௌடியா மடத் தெரு | ,, | 85752 |
| 3. கள்ளிக்கோட்டை : | மொயிதீன் பள்ளி ரோடு | ,, | 2984 |
| 4. திருச்சூர் : | ரௌண்ட் மேற்கு | ,, | 378 |
| 5. எர்ணுகுளம் 6 : | வளிஜ்ஜம்லம் | ,, | 494 |
| 6. பாலக்காடு-1 : | மார்க்கெட் ரோடு | ,, | 195 |
| 7. பொன்னுனி : | கடைவீதி | ,, | 41 |
| 8. கண்ணனூர் : | பிள்ளையார் கோயில்ரோடு | ,, | 92 |
| 9. ஆலத்தூர் : | கோர்ட் வீதி | | |
| 10. கோயமுத்தூர் : | ரயில்வே ஜங்ஷனுக்கு எதிரில் | | 33758 |
| 11. கஞ்சிக்கோடு : | மெயின் ரோடு. | | |
| 12. கோயமுத்தூர் | 229, ராஜவீதி, | ,, | 33988 |

சேல்ஸ் டிப்போ :

இந்திரா பில்டிங், சப் ஜெயில் ரோடு, கள்ளிக்கோட்டை.

பாக்டரி :
கஞ்சிக்கோடு (கேரளா)

நர்ஸிங் ஹோம் :
திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18.
(போன் : 22194)

தலைமை ஆபீஸிலும், எல்லா கிளைகளிலும் தரமுள்ள ஆயுர்வேத மருந்துகளும், நிபுணத்துவம் நிறைந்த வைத்திய ஆலோசனையும் கிடைக்கும். பிரதம வைத்தியரின் மூலம் கடிதங்கள் வழியாகவும் மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்படும்.

மேலும் விபரங்களுக்கு விண்ணப்பம் செய்க :

ஆர்ய வைத்தியன் P. V. ராமவாரியர்
பிரதம வைத்தியர் & மானேஜிங் டைரக்டர்.

OSR.

வாரியர்

# க்ஷீரபலா-101

ஸர்வாங்க வாதம், பாரிச வாயு முதலிய எல்லாவித மான வாத நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து. வாயுவினால் ஏற்படக்கூடிய மூச்சுப் பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துகள் தசை நார்களில் வலி, வீக்கம், கை கால் வலி முதலிய எல்லாவிதமான நோவுகளையும் நிச்சயமாகக் குணப்படுத்தும். மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல், கண்-காது கோளாறுகள், ஒருத்தலைவலி முதலிய கோளாறுகளையும் குணப் படுத்தும்:

ரத்த அழுத்தம் [பிளட் பிரஷர்] என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கும் வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்து வந்தால் வாத ரோகங்களும் விருதாப்பியத்தினால் ஏற் படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்திக் குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

விலை 25 ML. ரூ. 7-00; 12 ML. ரூ. 3–75

ஆரிய வைத்தியர் கெ. எஸ். வாரியர் அவர்களின்

## அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

சைனபஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி-2.

PHONE: 5441 வீடு போன்: 6074

[1936-ல் நிறுவப்பட்டது.]

கஸ்தூரி, குங்குமப்பூ, மற்றும் இதர
உயர்ந்த மருந்து சரக்குகளுக்கு
நம்பிக்கையான இடம்

BHALLA BROTHERS (Regd.)

LUDHIANA (India)

IN THE SERVICE OF AYURVEDA SINCE 1934

SUPPLYING PURE ARTICLES.

ஆங்கிலம் அல்லது ஹிந்தியில் எழுதவும்

உயர்ந்த கஸ்தூரி, குங்குமப்பூ,
பச்சைகர்பூரம் முதலியவைகளுக்கு
மிகவும் சிறந்த இடம்.

Wholesale Dealers in:
Musk Saffron and Ayurvedic Drugs etc.

CORRESPOND IN HINDI OR ENGLISH

Shri Markanday Musk Depot

(Regd.)

Importers and Exporters

Civil Lines, LUDHIANA, PUNJAB.

கஸ்தூரி, கோரோசனை, பச்சகர்ப்பூரம், குங்குமப்பூ முதலியவைகளுக்கு நம்பிக்கையான இடம்

**BHANOT BROTHERS**

(REGD.)

**Wholesale Musk, Saffron and Indian Drugs Merchants,**

**LUDHIANA - PUNJAB**

ஹிந்தி அல்லது ஆங்கிலத்தில் எழுதவும்

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள் சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள் இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

***K. L. TALWAR & BROS.,***

MUSK MERCHANTS,

**P. B. No. 17, LUDHIANA.**

விலைப் பட்டியல் கேட்லாக்களுக்கு எழுதவும்.



# வைத்திய சந்திரிகா


தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை.

| தொகுதி 32<br>Vol. 32 | ஸௌமிய மாசி<br>1970 மார்ச் | பகுதி 3<br>No. 3 |
| --- | --- | --- |


நமச் சிவகுமாராய.

॥ श्री धन्वन्तरये नमः ॥

उदेतु हृदयाकाशे गुरुवर्यकलानिधिः ।
यदीयचन्द्रिका वैद्यसंशयध्वान्तनाशिनी ॥

## மம்மி

"மம்மி" என்ருல் நாய்க்குட்டி அல்லது பூனைக்குட்டி என்று எண்ணவேண்டாம். இது ஓர் உயர்ந்த மருந்து. ரஷ்யாவில் இதை சர்வரோக சஞ்சீவியாகக் கூறுகிருர்களாம்.

ஆங்கில மொழி அதிகம் பிரசாரமாகாத காலத்தில் ஒருவன் இங்கிலீஷ் படித்துவந்தானும். அவன் வீட்டிற்கு வந்ததும் தன் தாயிடம் ஒருகப் வாட்டர் வேண்டும் என்று கூறினுனும். தாயாருக்கு ஆங்கிலம் தெரியாதல்லவா? என்ன கேட்கிருனே குழந்தை தெரியவில்யே? என்று திகைத்து நின்ருளாம். அது மாதிரி மம்மி என்ற பெயரால் எவரும் பொருள் புரியாமல் சிரமப்பட நேரிடும்.

நமது தேசத்தில் சர்வரோக சஞ்சீவி என்று மகரிஷிகள் கூறியுள்ள கோமூத்ர சிலாஜதுவையே ரஷ்யாவில் ''மம்மி'' என்று அழைக்கிறார்களாம். சிலாஜதுவைக் குறித்து நமது தேசத்தில் மறுபடியும் பிரசாரம் செய்ய இது நல்லதருணம். நமது மகரிஷிகள் சொல்லிவிட தற்போது பிற நாட்டவர் சொல்லில்தான் நமக்கு நம்பிக்கை. ''ஸர்வஷுரோகேஷு சிலாஹ்வயம்ச. ந ஸோஸ்தி ரோகோ புவி ஸாத்யரூப: |'' என்றெல்லாம் நமது நூல்களில் கூறப்பட்டுள்ளன. அதாவது எல்லா வியாதிகளுக்கும் ஒரே மருந்து சிலாஜது, சிலாஜதுவினால் தீராத வியாதிகளே கிடையா என்பது இதன்பொருள்.

இதையே இப்போது ரஷ்ய தேசத்திலும் கூறுகிறார்கள். சர்வரோக சஞ்சீவி, பாறைகளிலிருந்து ஒழுகும் கறுப்பான சாந்துபோன்ற சத்து மருந்து என்று கூறப்படுகிறது சிலாஜது என்றாலே பாறைகளிலிருந்து அரக்குபோன்று ஒழுகும் மருந்தையே குறிப்பிடுகிறது. உண்மையில் எல்லா நோய் களுக்கும் இது ஒரே மருந்து. ஆனால் நமது தேசத்தில் இதை கவனிப்பார் இல்லை. நல்ல சிலாஜதுவும் கிடைப்பதில்லை. இயற்கை சரக்கை எடுக்கவும் சுத்தமானதை வியாதியில் உபயோகிக்கவும் வேண்டிய ஏற்பாடுகள் கிடையாது! இப்பொழுது இது இமய மலையிலிருந்து சிறிது எடுக்கப்படுகிறது. அதுவும் வியாபார நோக்கத்துடன் கலப்படமாகத்தான் கிடைக்கின்றது.

இது எல்லா மலைகளிலும் வெய்யில் காலத்தில் வெளிவரும். எனது நண்பர் ஒருவர் ஈரோட்டுக்குப் பக்கத்தில் உள்ள சங்ககிரி என்ற சிறிய குன்றிலும் இது கிடைக்கின்றதாக சொன்னார். கொல்லிமலை மேற்குத் தொடர்ச்சிமலை இவைகளிலெல்லாம் நிறைய கிடைக்கக்கூடும். ஒற்றப்பாலம் என்ற ஊருக்குப் பக்கமுள்ள அனங்கன் மலையில் இந்த மருந்து ஒழுக நான் கண்டுள்ளேன். வைத்யர்கள் உபயோகிபபதையும் நான் பார்த்துள்ளேன். அரசாங்கம் இந்த மருந்தின் பெருமையை அறிந்து வன இலாக்காமூலம் இந்த மருந்தை எடுத்து சுத்த மாகக் கிடைக்கச் செய்தால் மிக உபகாரமாக இருக்கும். இதற்கு மேல் மருந்து கிடையாது என்று ஆயுர்வேதம் கூறுகிறது. தவிர இது இயற்கை சரக்கு. யோக வாஹி. எந்த மருந்துடனும் விரோதமில்லாதது என்பதும் கவனிக்கத் தகுந்தது.

———

# வல்மீகார்புதங்களும் புற்றுநோயும்

பண்டித P. S. ராமசர்மா, வைத்ய வாசஸ்பதி, கரூர்.

(பிப்ரவரி இதழ் தொடர்ச்சி)

இதனல் எவ்வகையிலும் பாகமே கிடையாது என மதுகோச விளக்க நூல் எழுதியுள்ளவர் கூறுவது அவ்வளவாகச் சரியில்லை என தோன்றுகிறது. நாம் முன்பு எடுத்துக்காட்டிய பல வாக்யங்களிலிருந்து எப்போதாவது பாக நிலை ஏற்படலாம் என்ற கருத்து வெளியாகிறது. ஆகவே பாகம், பாகமில்லாத நிலை, வெகுநாட்கள் கழித்து பாகம் ஏற்படல், வெகுகாலம் கழித்து விருத்தியாதல், சீக்ரத்தில் வளர்ச்சி இவைகள் எல்லாம் தோஷ தூஷ்யங்களின் சேர்க்கையைப் பொருத்தும் தேசம் காலம் பத்யா பத்யங்கள் உடல்நிலை இவைகளை அனுசரித்தும் ஏற்படுகின்றன என்பதை ஒருவாறு ஊகித்து அறியலாம். "பக்வே து துஷ்ட மாம்ஸாநி" பக்வப்பட்டால் மாம்சம் தோஷமடைகிறது என்பதனல் வல்மீகத்திற்குப் பாகம் உண்டு என்பது நேரிடையாகக் கூறப்பட்டுள்ளது.

நோயை குணப்படுத்த முடியுமா முடியாதா? இதில் மர்மஸ்தானத்தில் உண்டானவை, ரக்தத்தில் உண்டானவை, மாம்சத்தில் உண்டானவை, அதியர்புதம், த்விரர்புதம், வல்மீகம் இவைகள் குணப்படுத்த முடியாதன என்பதை நேரிடையாக கூறியுள்ளனர். ஸம்பிரஸ்ருதம் (ரக்தப்பெருக்கு) ஸ்ரோதோஜ (ரக்தக் குழாய்களில் உண்டாவது) ஸ்திரா, இவைகளும் அஸாத்ய நிலைகளை உடையவைதான். பாகம் இல்லாவிடில் ஸம்பிரஸ்ருத நிலை (ரக்தப் பெருக்கு) எப்படி ஏற்பட முடியும் என்ற ஓர் கேள்வியை எழுப்பிக்கொண்டு மதுகோசம் என்ற விளக்க நூல் எழுதியுள்ளவர் பதில் கூறுவதாவது, தோல் பிளவு படுவதால் ரக்தப் பெருக்கு ஏற்படும் என்று. இவ்வளவு விளக்கங்களையும் நாம் ஒன்று சேர்த்து ஆலோசிக்குங்கால் தற்காலத்தில் கூறப்படும் Cancer என்பதும் நம் நூல்களிலுள்ள வல்மீகம் அர்புதம் என்பனவும் ஒன்றுதான் என அறியலாம். ஆகவே Cancer என்பதை "கர்கடக வ்ரணம்" என்று புதுப்பெயர் வைத்து அழைப்பது சரியல்ல. இதனல் ஆயுர்வேதத்தின் மதிப்பை குறைத்ததாக ஏற்படும். சிகித்ஸையிலும் கலக்கம் ஏற்பட ஏதுவாகும். வலி, எரிச்சல், தினவு, தண்ணீர் வடிதல், வீக்கம், துன்பம் இவைகள் இந்நோயில் ஏற்படுகின்றன.

இதற்கான சிகித்ஸைகள் — சாஸ்திரத்தில் கூறப்பட்ட சிகித்ஸைகளுடன் நம் அனுபவத்தில் உள்ள சில சிகித்ஸை முறைகளேயும் நாம் இங்கு கூறுவோம்

பெரும்பாலும் உலகம் பூராவும் சுற்றி எந்த வைத்யரிடமும் தனக்கு குணம் கிட்டவில்லே என்ற நிலேயில் வியாதியுள்ளவன் ஆயுர்வேத வைத்யனேக் கடைசியாக சரணம் அடைவான். அந்நிலேயில் ரோகியிடம் உள்ள நோய் தீர்க்கப்பட முடியாத நிலேயைத்தான் அடைந்து இருக்கும். ஆகவே ஆயுர்வேத வைத்தியனுல் அவனுக்கு அபயம் அளிக்க முடியாது. ஆனுல் கடவுள் கிருபையை வேண்டிக்கொண்டுதான் வைத்யம் செய்ய முற்படுவான். அப்படிப்பட்ட ஓர் நிலே வைத்யம் செய்யும்போது ஆயுர்வேத மருந்துகளுக்கு குணம் தெரிந்தால் இதிலிருந்து நம் நாட்டு மகரிஷிகளின் வேத வைத்யத்தின் உயர்வை மஹிமையை எவ்வாறு வர்ணிப்பது என்பதே தெரியவில்லே.

இந்த ஆயுர்வேத சாஸ்திரத்தில் பலவாருன சிகித்ஸைகள் தோஷங்களின் மாறுபாட்டிற்குத் தக்கவாறு சாதாரணமாகக் கூறப்பட்டிருக்கின்றன. கிரந்தி, அர்புதம், ஆகியவைகளில் சில குறிப்பிட்ட சரக்குகளால் தயார் செய்யப்பட்ட மருந்துகளால் ஸ்நேஹ ஸ்வேதங்கள், நாடீஸ்வேதங்கள், விரேசனங்கள், பத்துப்போடுதல், க்ஷாரங்கள், சுட்டெரித்தல், வெட்டி எறிதல், முதலியன தனிப்பட்ட முறையில் கூறப்பட்டுள்ளன. இவைகளே எல்லாம் தேசம், காலம், உடல் வலிமையின் நிலே, இவைகளேக் கண்டு கொண்டு சிறந்த வைத்யர்கள் கைக்கொள்ளவேண்டும். மேலே கூறப்பட்டுள்ள சிகித்ஸைகளில் தடை செய்யப்பட்டவைகளே விலக்கி, கூடாது என தடைவிதிக்கப்பட்ட நோய்களுக்கு சிகித்ஸை அளிக்கும்போது சாஸ்திரங்களில் கூறியபடியேதான் ஆரம்பிக்கவேண்டும் எனத் தெரியப்படுத்துவதற்காக வல்மீக சிகித்ஸையைப்பற்றி இங்கு சிறிது கூறுவோம்

கைகால்களுக்கு மேலே மர்மஸ்தானத்தில் உண்டான ஏராளமான துவாரங்கள் கொண்ட வீக்கத்துடன் கூடிய வல்மீகத்தை வைத்யம் செய்யாமல் விட்டுவிடுவது உசிதம். முன் கூறப்பட்டபடி இல்லாமல் இருந்தால் அதில் உள்ள ரக்தத்தை வெளிப்படுத்தவேண்டும். ஸத்து மாவு, தவிடு, உப்பு, சீந்தில் கொடி, சரக்கொன்னே, சாமை, நீர்வாளம், கொள்ளு, இவைகளே அரைத்துப் பத்துப்போடலாம். பக்வமான பிறகு கெட்டுப்போன மாம்சத்தை சஸ்திரத்தால் போக்கி நெருப்பாலோ க்ஷாரத்தாலோ அதைப் பொசுக்கவேண்டும். அந்த வ்ரணத்தை சுத்தம்செய்து சேராங்கொட்டை, மனச்சிலே, ஏலம், அகில், சந்தனம், முதலானவற்றைக்கொண்டு தயாரிக்கப்பட்ட வேப்பெண்ணேயை

வ்ரணத்தை ஆற்றுவதற்காக உபயோகிக்கவேண்டும். இவ்வாறு கூறுவதிலிருந்து வாக்படாசாரியர் காலத்தில் வல்மீகம் அர்புதம் இவைகளில் வைத்யம் செய்வதற்கான ஆரம்பம் நல்லமுறையில் அறியப்பட்டிருந்தது என்பதில் கருத்து வேறுபாடே ஏற்பட முடியாது. சிறிது காலத்திற்குப் பிறகு அரசாங்க ஆதரவு இல்லாததுடன் வெளிநாட்டு ஆக்ரமிப்பாலும் இந்த ஆயுர்வேதத்திற்கு மிகப் பெரிய கெட்டகாலம் ஏற்பட்டது என்பதை தற்காலத்தில் ஆயுர்வேதத்தின் நிலையைக் கண்ணுறும் யாவரும் மறுக்க முடியாது.

ஒவ்வொரு நோயிலும் இந்த இந்த முறையில் இந்த இந்த சிகித்ஸைகளை அளிக்க வேண்டும் என நன்கு உணர்ந்து கூறப்பட்டுள்ளது. பணம், உதவிசெய்ய மனிதர்கள், சாதனமான உபகரணங்கள், இவைகளைப் பெருத நம்மால் எத்த வைத்தியத்தையும் முழுமையாகவும் திறமையுடனும் செய்ய முடிவதில்லை என்பதை நினைக்க மிக மனவேதனை அடைய வேண்டியுள்ளது. ஆனாலும் வேதத்தில் கூறப்பட்டு மகரிஷிகளால் வெளியிடப்பட்ட இவ்வைத்ய முறைகள் மருந்துகளின் சிறந்த குணத்தில் இப்பொழுதும் பிரசாரத்தில் இருப்பதை நாம் எல்லோரும் நன்கு கவனிக்க வேண்டும்.

இந் நோயில் எமது அனுபவத்தில் நன்கு பலனை அளிக்கும் சில மருந்துகளை இங்கு சிறிது கூறுவோம்.

பஞ்சதிக்த கிருதமும், ஸஹஸ்ரயோகத்தில் கூறப்பட்ட பிருஹத் மதுஸ்னுஹீ ரஸாயனமும் இந் நோய்வாய்ப் பட்டவர்களுக்கு நோயின் தீவ்ரத் தன்மையைக் குறைக்கின்றது. விடங்க அரிசியை ரஸாயன முறையில் உட்கொள்ளுவதும் உள்ளே அந்த விடங்கத்தின் பொடியைத் தூவுவதும் நோயில் ஏற்படும் உபத்ரவத்தை குறைப்பதுடன் நோயின் சக்தியையும் குறைக்கும். கொடுவேலி சேராங்கொட்டை இவைகளை ரஸாயன முறையில் உபயோகித்தல சிறந்த பலனை அளிக்கின்றது.

"விடங்க பல்லாதக நாகராணி யேச்நந்தி ஸர்பிர்மது ஸம்யுதானி" என்ற முறை மிகுந்த நற்பயனை அளிக்கின்றது.

ஆயுதங்களை உபயோகிக்க வேண்டிய இடங்களில் சஸ்திர சிகித்ஸை செய்த பிறகு நாம் முன்பு கூறிய மருந்துகளை உபயோகித்தல் மிகுந்த நன்மை தருகின்றது.

மேல் நாட்டு வைத்ய முறையில் மூவகை சிகித்ஸையை அளித்து ரோகத்தின் வேகத்தை சிறிது குறைப்பர்.

1. இதில் நம் நூல்களிலும் கூறப்பட்டுள்ள சஸ்திரகிசித்ஸை முதலாவதாகும். நன்கு உள்ளே ஆழத்தில் உள்ள இந்த மாம்

ஸத்தை முடிந்த வரையில், சஸ்திர சிகித்ஸை செய்யத்தக்க இடத்தில் இருந்தால் முதலில் சஸ்திர சிகித்ஸை செய்து அதை சுத்தம் செய்து விட்டாலும், மறுபடியும் அதே இடத்தில் இந்த நோயால் வளர்ச்சி தெரிவதாக இருந்தால் அந்த மாதிரியான சந்தர்ப்பங்களில் நம் நூல்களில் கூறப்பட்டுள்ள வீர்யமுள்ள மருந்துகளை உபயோகிக்கவேண்டும்.

2 இரண்டாவது சிகித்ஸை ரேடியம் சிகித்ஸை. (Radium Treatment) இந்த சிகித்ஸைக்கு அதிகம் பணச்சிலவு ஆகும்.

3. மூன்ருவது மிக ஆழமாக உட்செல்லும் X கதிர் சிகித்ஸை யாகும். (Deap X. – Ray)

கர்ப்பாசயம் முதலான இடங்களில் அதை சஸ்திர சிகித்ஸை மூலம் போக்குவதே சிறந்ததாகும்.

தற்காலத்தில் எல்லா நாடுகளிலும் இந்நோயைப் போக்கும் விஷயத்தில் இரண்டு முறைகள் கையாளப்படுகின்றன.

1. இந்நோய்க்கான மூலகாரணம் என்ன என்பதைக் கண்டு அதைப்போக்குவதற்கான உபாயத்தைத் தேடுவது. இதனுல் வியாதி உண்டாவதன் காரணத்தை அறிவதால் வியாதியைப் போக்குவது சுலபமாக இருப்பதுடன் வியாதியும் திரும்பவராது இருக்கும்.

2. இரண்டாவது முறையாவது – மருந்துகளை ஆராய்ச்சி செய்வது, சாப்பிடுவது – பலவகையான மருந்துகளில் ஏதாவது ஒன்று வியாதியைப் போக்காதா என்று பல முறைகளில் ஆராய்ச்சி செய்வதாகும். இம்மாதிரி ஆராய்ந்து கொண்டே போனுல் பல மருந்துகளில் தெய்வச்செயலால் ஏதாவது ஒரு மருந்து நோயைப் போக்குவதாகத் தெரியவருமல்லவா! அதன் பொருட்டு இதில் ஈடுபாடு கொ கின்றனர். ஆராய்கின்றனர். ஆனுல் இன்று வரையில் நிலையாகப் பயனை அளிக்கும் மருந்து கண்டு பிடிக்கப்படவில்லை. ருஷ்ய நாட்டில் தறகாலம் வல்மீக சிகித்ஸை செய்யும்போது A C. S. சீரம் என்ற மருந்தை ஆபரேஷனுக்குப் பிறகு உபயோகிப்பதாகத் தெரியவருகிறது இந்த மருந்தை உபயோகிப்பதால் நோய் திரும்ப வருவதில்லை என்றும் கூறுகின்றனர். இம்மாதிரியான மருந்துகளைத் தேடிச்செல்வது மிகச் சிறந்ததே.

மற்ற முறையில் வைத்யம் செய்பவர்களுக்குக் கிடைக்கும் திரவ்ய சகாயம் மனுஷ்ய சகாயம், ராஜ சகாயம், ஆயுர்வேத வைத்யர்களுக்கும் கிட்டுமேயானுல் மகரிஷிகளால் தெரிவிக்கப் பட்ட நிச்சயமான பலனை அளிக்கும் மருந்துகளைத் தயாரித்து ஆயுர்வேத சாஸ்திரத்திற்கும் பிரசாரம் ஏற்பட்டு தர்மா தர்ம விவேகம் உள்ள இவ்வுலகம் கடவுள் அருளால் நோயற்று வெகு நாள் இருக்கும்.

# தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்
## நிர்வாஹ ஸமிதிக்கூட்டம்

நமது மஹாமண்டலத்தின் நிர்வாஹ ஸமிதிக்கூட்டம் 25—2—70 புதன்கிழமை மாலை 3-மணிக்கு திருச்சி சின்னக்கடைத் தெரு திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் கட்டடத்தில் மஹாமண்டலத் தலைவர் வைத்ய ஸ்ரீ டி. எஸ். ஈச்வரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஸ்ரீமான்கள் வா. பா. நடராஜ சாஸ்திரிகள், ஏ. ராகவராவ், பி. எஸ். ராமசர்மா, வி. எஸ். வெங்கடஸுப்பிரமணிய சாஸ்திரிகள், எஸ். வி ராதாகிருஷ்ண சாஸ்திரிகள், என். ஸி. எஸ். ராகவன், டி. வி. மாணிக்கம் ஆகியோர் கூட்டத்திற்கு வந்திருந்தனர். கோவை ஸ்ரீ பி. வி. ராமவாரியர் அவர்களிடமிருந்து கடிதம் வந்தது.

தீர்மானிக்கப்பட்ட விஷயங்களின் விவரம் வருமாறு :

1. (a) வைத்திய சந்திரிகையின் அச்சுக்கூலி, செலவினங்கள் கூடுவதால் இவ்வாண்டில் நேரக்கூடிய அதிகச்செலவை நன்கொடை மூலம் சீர்செய்யவேண்டும்.

(b) வைத்திய சந்திரிகையின் அனுபந்தமாக மஹாமண்டலம் மூலம் ஆயுர்வேத பாடப்புத்தகங்கள் எழுதி வெளியிடும் நோக்கத்துடன் சாரீரம், ஸ்வஸ்த விருத்தம், நிதானம் என்ற மூன்று தலைப்புகளில் விஷயங்கள் எழுத ஸ்ரீ வா பா. நடராஜ சாஸ்திரீ, ஸ்ரீ பி. எஸ். ராம சர்மா, ஸ்ரீ வி. எஸ். வெங்கடஸுப்பிரமணி சாஸ்திரீ, ஸ்ரீ எஸ். வி ராதாகிருஷ்ண சாஸ்திரீ ஆகிய நால்வர் அடங்கிய உபகமிட்டி நிறுவப்பட்டது. இவர்கள் தேவையாயின் மேற்கொண்டு அங்கத்தினர்களைச் சேர்த்துக்கொள்ளலாம். புத்தகங்கள் எழுதக்கூடிய ஸாத்தியக் கூறுகளை நன்கு யோசித்து அவைகளை வெளியிடத் தேவையான நிதிக்கான ஏற்பாடுகளை அடுத்த கூட்டத்தில் யோசிக்கலாம்.

(c) B. I. M. ஆயுர்வேத வகுப்புகள் நடத்தத் தடையாக இருப்பவைகளை நீக்க யுனிவர்சிடி சிண்டிகேட் அங்கத்தினர்களைச் சந்திக்கவும் பாளையங்கோட்டை இந்திய வைத்தியக்கல்லூரி தலைவரைச் சந்திக்கவும் மேற்கொண்டு தொடர்ந்து ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

2. இதர அவசர விஷயங்கள் ஒன்றுமில்லை.

A. ராகவராவ்,
பொதுக்காரியதரிசி.

# ஆமவாதத்தில் ஆமதோஷத்தின் விளக்கம்

Dr. வி. நாராயணசாமி, H.P.I.M.

முன்னுரை

ஆயுர்வேத சாஸ்திரத்தில் 'ஆமம்' என்கிற சொல் பல இடங்களில் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. கிரந்த கர்தாக்களும் வியாக்யான கர்தாக்களும் அச்சொல்லிற்கு இடத்துக்கும் சந்தர்பத்திற்கும் தகுந்தமாதிரி விளக்கம் கூறியுள்ளனர். இருந்தாலும் அதனுடைய சொருபம் நன்ருக விளக்கப்பட்டதாகத் தெரியவில்லை. கீழ்வரும் விளக்கமும் அதே போன்று வேருெரு விளக்கமாகவு மிருக்கலாம். ஆமவாதத்தில் (Rheumatoid arthritis, rheumatic joints and fibrocitis) ஆமம் என்பது நோய்க்கு முக்கியகாரணமாக ஆகிறது. ஆமஜ்ஜவரம், ஆமாதிசாரம் போன்ற இடங்களிலும் சிகித்சைக்காக வியாதியின் நிலையை அறிவதற்கு ஆமம், பக்குவம் என்று பிரித்திருக்கின்றனர். ஆமம் என்பது ஒரு திரவியம்தான். ஏனென்ருல் அதற்கு குணமும் கர்மாவும் சொல்லியிருக்கிருர்கள், ஆப்டேயின் சம்ஸ்கிருத அகராதியில் இச்சொல்லிற்கு பொருள் கூறும்போது, "பச்சையான, சமைக்கப்படாத, முதிராத, பழுக்காத" என்கிற பொருள்களை சொல்லியிருக்கிறது. ஆமரசம் என்கிற சொல்லிற்கு பக்குவமாகாத ஆகாரரசம் என்று சொல்லியிருக்கிறது. ஆக, நாமும் பக்குவமாகாத ஆகாரரசம் என்கிற பொருளை வைத்துக் கொண்டு ஆராய்வோம்.

ஆயுர்வேதத்தில் ஆகாரபசன (ஜீரண) விவரம் : ஆமம் என்பது சரியாக பக்குவமாகாததும், பரிணமம் ஆகாததுமான ஆகாரம் என்ருல் அந்த ஆகாரத்தின் ஜீரணத்தை பற்றியும் பரிணமத்தைப்பற்றியும் (Digestion and metabolism) முதலில் நாம் அறிந்துக்கொள்ளவேண்டும். ஆயுர்வேதத்தில் இவ்விரண்டு தொழில்களும் பதிமூன்றுவகையான அக்நியால் நிறைவேற்றப் படுகின்றன.

அவை, ஜாடராக்கிநி (1) பூதாக்கிநி (5) தாத்வக்நி (7) என்பன. ஜாடராக்கிநி என்கிற சொல் காயாக்நிக்கும் உபயோகப்படுத்தப் படுகிறது. இது முக்கியமாக, ஆகாரத்தை வயிறு குடல்களில்

ஜரிக்கும்படி செய்கிறது. ஜாடராக்நியைப்பற்றி கூறும்பொழுது, இது பாசகபித்தத்திற்கு வேருனது என்று சொல்லமுடியாது. வாக்படாசார்யர், இந்தபித்தத்தில் இடத்தையும், காரியங்களேயும் சொல்லும்போது, "இது ஆம பக்வாசயத்திற்கு மத்தியில் அமைந்திருக்கிறது, திரவத்தன்மையற்று உடலுக்கு சூட்டைக் கொடுப்பதால், அநலம் என்கிற பெயரை அடைகிறது உணவை ஜீரணம் செய்து, சத்தைப் பிரித்து எடுக்கிறது, அது அவ்விடத்திலிருந்தே மற்ற பித்தங்களுக்கும் பலத்தை அளிக்கிறது" என்று கூறுகிருர் (அஷ்டா–ஹிருதயம் சூத்தி XII 10-12) இதே கருத்து மற்ருெரு இடத்திலும் சொல்லப்பட்டு இருக்கிறது. இந்தகாயாக்நி, தன்னுடைய இடமான கிரஹணியிலிருந்து கொண்டு, தாதுக்களிலிருக்கின்ற அக்நிகளுக்கும் ஓர் அம்சத்தை அளிக்கிறது." இந்த 'அம்சம்' என்கிற சொல்லிற்கு, வியாக்கியானம் செய்யும், ஹேமாத்ரி, க்ஷுத்ராணி நாபருந்தராணி, அதாவது சிறிய அளவில் மாறு ரூபத்தில் வேலை செய்கிறது என்று சொல்லுகிருர். அதனுடைய அர்த்தம் என்னவென்ருல், தாதுக்களில் வேலை செய்வது பாசகபித்தமில்லை, ஆனுல் பாகாதி கர்மாக்களை வேறு ரூபத்தில் வேறு இடத்தில் செய்கிறது என்பதே. உடலில் ஒரு பொருளிலிருந்து மற்ருெரு பொருளாக மாற்றப்படுவது எப்பொழுதும் பித்தத்திஞல்தான் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். சுச்ருதர் பித்தம் அக்நிதான் என்கிருர். (யத் தேஜச குணோதயாத்) தேக தாதுக்களிலிருக்கும் அக்நி ஏழுவகையானது. அவைகள் நன்ருக வேலை செய்தால் தாதுக்கள் வளர்ச்சி அடைகின்றன. நன்ருக வேலை செய்யாவிட்டால் அளவிலும் குணத்திலும் மாறுதலை அடைகின்றன (ஸ்வஸ்தானஸ்தஸ்ய காயாக்நேரம்சா தாதுஷு சம்சிரிதா:| தேஷாம் சாதாதிதீப்திப்யாம் தாது விருத்தி க்ஷயோத் பவ:॥ பூர்வோ தாது: பரம் குர்யாத் விருத்த: க்ஷீணச்ச தத்விதம்| – (அஷ். ஹி. சூ. XII – 34)

முதல் தாதுவான ரசதாது சரியாக உண்டாக்கப்படாவிட்டால் ரக்தம் முதலிய தாதுக்களும் குறைவடைவதோடு தமது குணங்களேயும் கெடுத்துக்கொள்ளுகின்றன.

பஞ்ச பூதாக்நியால் செய்யப்படும் காரியம் வேறுவிதமானது. ஆகாரம் ஜாடராக்நியால் பேதிக்கப்பட்டு ஜீரணமாகிறது. ஜீரணிக்கப்பட்ட ஆகாரம் பஞ்சபூதங்களின் சேர்க்கையாலானது; பார்திவ திரவ்யம், ஆப்ய திரவியம் போல, இந்த திரவ்யங்களின் ஒவ்வொரு அம்சத்திலும் அதைச் சேர்ந்த ஊஷ்மா இருக்கிறது. பார்த்திவ திரவியத்தில் பார்த்திவோஷ்மாவும், ஆப்ய திரவியத்தில்

ஆப்யோஷ்மாவுமாக. இந்த ஊஷ்மாக்கள் தன் தன் பொருள் களை (பார்த்திவ – ஆப்ய) பாகம் செய்கின்றன (ஜாடரேணுக்நிநா பூர்வம்கிரியதே சங்காத பேத: பச்சாத் பூதாக்நய: பஞ்ச ஸ்வம் ஸ்வம் திரவியம் பசந்தி – சக்ரபாணி) தாதுக்களிலும் கூட பஞ்ச பூதங்களிருப்பதால் அவ்விடங்களில் தாத்வக்நி வியாபாரமும், பூதாக்நி வியாபரரமும் நடைபெறுகின்றன. இச்செயல்களால் உடலில் பல்வேறு தசைகளும் உடல் கூறுகளும் தமக்கேற்ற ஆகார பொருள்களால் (சஜாதீய திரவ்யகுண) போஷிக்கப்பட்டு தம் தம் வாசனை, ஒளி, சூடு, கனம் முதலிய குணங்களைப் பெறுகின்றன.

பூதாக்நியின் செயல் முடிந்தவுடன் தாத்வக்நி வியாபாரம் ஆரம்பமாகிறது. இச்செயலில் தாதுக்களில் இரண்டு விதமான மாறுபாடுகள் உண்டாகின்றன. ஒன்று பிரசாதாம்சம் என்று சொல்லப்படும் தெளிவான தாதுப்பொருள். மற்றொன்று மலம என்று சொல்லப்படும் கழிவுப்பொருள். அப்படி சுக்ரத்தை தவிர எல்லா தாதுக்களுக்கும் பிரசாதாம்சமும் – மலாம்சமும் இருக் கின்றன. இதுதான் ஆயுர்வேதத்தில் சொல்லப்படும் ஆகார ஜீரணமும் பரிணமமும் (Digestion and Metabolism)

## அஜீர்ணத்தால் ஏற்படும் கெடுதலும் ஆமம் உண்டாதலும்

இப்பொழுது ஜீரணம் சரியாக ஆகாமல் எப்படி ஆமம் உண்டாகிறதென்பதை கவனிப்போம். ஊஷ்மாவின் குறைந்த பலத்தால் ஆகாரம் சரியாக பாகமடையாமல், முதல் தாதுவான ரசம் ஆமரசமாக உண்டாகிறது என்கிறது சாஸ்திரம். ஆகாரத் தின் அஜீர்ணம் என்பது வேறு, ஆமம் உண்டாதல் என்பது வேறு, ஜாடராக்நியானது பலவித காரணங்களால் தாக்கப்பட்டு, உண்ட உணவு சரியாக பக்குவம் ஆகாமல் போனுல் அஜீர்ணம் என்னும் நோய் பல குறிகளுடன் உண்டாகின்றன. ஆனுல் ஆம உற்பத்தியில், ஆகாரம் ஜீரணமடைகிறது, ஆனுல் அக்நியின் பலக்குறைவால் தகுந்தவிதமாக ரசதாது உற்பத்தி ஆவதில்லை. அஜீர்ணரோகத்தில் பாகமடைாத ஆகாரம் வாந்தி மூலமாகவோ, பேதி மூலமாகவே வெளியே வந்து விடுகிறது. இந்நிலையில் வாத பித்த கபங்கள் கோபத்தை அடைகின்றன. ஆனுல் ஊஷ்மா குறைவாகயிருப்பதில் ஆமரசம், ஆமாசயத்தை விட்டு உடலில் தாதுக்களுடன் கலந்து விடுகிறது (ஆமாசயாத்கதம் ரசம் - உத்தி தம் - ரசம் ஆமம் இதி பிரசக்ஷதே – கணநாதசேன்) இதில் போஷகமான ஆகாரரசம் மட்டும் கெடுவதில்லை, ஸ்தாயிரசமான

ரச தாதுவும் கெட்டு விடுகிறது. இங்கே 'ஊஷ்மா' என்ற சொல்லிற்கு ஜாடராக்நி என்று மட்டும் பொருள் கொள்ளாமல் தாதுக்களில் புதைந்து கிடக்கும் மற்ற ஊஷ்மாக்களையும் சேர்த்துக் கொள்ளவேண்டும் ஏனெனில் காயாக்நியின் ஒரு அம்சம்தான் தாத்வக்நிகளுக்கு பலத்தை கொடுக்கிறது (சுவஸ்தானஸ்தஸ்ய காயாக்நேரம்சா : தாதுஷு சம்சிரிதா :) முக்கியமாக கருதப்படும் காயாக்நியின் பலம் குறைந்தால் மற்ற அக்நிகளுக்கும் பலம் குறையும். இது ரசத்திலோ, ரக்தத்திலோ, மாமிசத்திலோ பலம் குறைந்து காணப்படும். இது அந்தந்த தாதுக்களின் பலக்குறைவால் ஏற்படுகிறது இந்த ஆமம்வேறு; நோய்களில் சொல்லப்படும் ஆமஜ்வரம், ஆமாதிசாரம் போன்ற ஆமம்வேறு. இந்நோய்களில், தோஷங்கள் கெட்டு நோய்களின் சம்ப்ராப்தி பிரகாரம், தேகத்தில் பல இடங்களில் தங்கி நோய்களுக்கேற்ற லக்ஷணங்களை உண்டாக்குகின்றன. இந்நோய்களில் தாதுக்கள் கெடுவதில்லை. தோஷங்கள் கெட்டு அந்நோய்க்குத் தகுந்த தூஷ்யம்தான் கொடுக்கிறது. இந்நோய்களில், நோயின் நிலைமையை (Stage) அறிவதற்கு ஆமம், பக்குவம் என்று விவரிக்கப்படுகிறது இதனால் சிகித்சை செய்ய சுலபமாகிறது. ஆமாதி சாரமானல் பாசன மருந்துகளை கொடுக்கிறோம். பக்வாதி சாரமானல் ஸ்தம்பன மருந்துகளை கொடுக்கிறோம். ஆமதோஷம் தானே வெளியேறினல் அதை நாம் தடுப்பதில்லை ஆகையால் நோய்களில் சொல்லப் படும் ஆமம் வேறு, உடலில் தங்கும் ஆமதோஷம் வேறு.

தோஷங்கள் அதிக அளவில் கோபம் அடைந்து ஒன்றோடு ஒன்று சேருவதால் ஒருவிதமான விஷம் உண்டாகிறது. அதற்கும் ஆமம் என்று பெயர். முதல் சொன்னதுஜாடராக்நியின், அல்ப பலத்தால் உண்டாகும் ஆமம். ஆகார சத்திலிருப்பது மற்றவை வெளிக்காரணங்களால் தோஷங்கள் கோபமடைந்து உண்டாவது. இவ்விரண்டு ஆமங்களுமே ஆமவாதத்தை உண்டாக்கக்கூடும். முதலில் சொன்னது நிஜரோகமான ஆம வாதத்தை உண்டாக்கும், இரண்டாவது சொன்னது ஆகந்து காரணங்களாகிய பூயுமேகம், பிரங்கரோகம் முதலிய காரணங் களால், ஆமம் உண்டாகி ஆமவாதத்தை உண்டாக்குவது.

நவீன வைத்தியத்திலும், ஆமவாதம் ஆகார பரிணாம தோஷத் தால் வருகிறது என்று கருதப்படுகிறது. ஆகார பரிணாமம் என்பது, "ஜீவசத்துக்களின் ரசாயனமாறுதல்கள்" என்று விவரிக்கப்படுகிறது (Metabolism is the sum total of chemical change of living matter) ஆகையால் குடலில் ஏற்படும் ஆகார முதல் பாகத்தினல் மட்டும் (பிராக்பாக) ஆமம் உண்டாவதில்லை, ஆகாரத்தை தனித்தனியாக உடைக்கும் (சங்காடத பேத)

பொழுதும் ஏற்படலாம், அல்லது ஜீரணமாகிய ஆகார சத்துக்களை உடலின் தாதுக்கள் தமக்கு வேண்டிய குணங்களை அங்கீகரிக்கும் போதும் (சஜாதீயான் திரவியகுணன்) இந்த எல்லா நிலைமை களிலும் பாகம் அல்லது ரசாயன மாறுதல்கள் ஏற்பட்டுக் கொண்டேயிருக்கின்றன. இந்த ரசாயன மாறுதல்களுக்கு உதவி செய்வது வாதபித்த கபங்கள். ஆகையால் ஆமம் உண்டா வதற்கு முதற் காரணம் ஔதர்யாக்நி (ஜாடராக்நி) ஆனாலும் இது தாத்வக்நிகளையும்கெடுக்கிறது. ஔதர்யாக்நியால் கெடாதது பூதாக்நிதான்.

ஆயுர்வேதம், ஆமவாதம், ஆகாரபரிணாம தோஷத்தால் ஏற்படுகிறது என்று சொல்லுகிறது. ஆமவாதரோகிகளை கவனித்தால் பெரும்பாலானவர்களுக்குக் கெடுக்கப்பட்ட தாதுபரிணாமத்தால் தான் என்பது தெரிய வரும் இவைகளில் ரசதாது கெட்டதாய் மட்டுமல்லாமல் மற்ற தாதுக்கள் கெடுவதாலும் உண்டாகிறது (பூர்வோ தாது. பரம் குர்யாத் விருத்த: க்ஷீணஸ் சதத்விதம்) இது சம நிலைமையான தாதுக்களுக்கு மட்டும் சொன்னதல்ல. நிலைமையில் மாறுபட்ட தாதுக்களும் சொல்லப் பட்டது. ஆகையால் ஆமம் எந்த பரிணாம நிலையில் ஏற்பட்டாலும் ஆமவாதத்தை உண்டாக்கக் கூடும். இந்த ஆமம் நோயாளியை பொறுத்து வேறு நோய்களையும் உண்டாக்கக்கூடும்.

---

FORM IV (See Rule 8)

Statement about ownership & other particulars about newspaper

VAIDYA CHANDRIKA

| | | | |
|---|---|---|---|
| 1 | Place of Publication | ... | Tiruchirapalli |
| 2. | Periodicity of its Publication | ... | Monthly |
| 3. | Printer's Name | ... | V S. Mani |
| | Nationality | ... | Indian |
| | Address | ... | Githa Press, E. B Road Trichy-2 |
| 4. | Publisher's Name | ... | T. S. Iswaran |
| | Nationality | ... | Indian |
| | Address | ... | 27, Chinnakadai St Trichy-2. |
| 5. | Editor's Name | ... | P. S Rama Sarma |
| | Nationality | ... | Indian |
| | Address | ... | Sakthi Vilas Vaidyasala, Karur. |
| 6. | Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital, | ... | Tamilnad Ayurveda Mahamandalam 27, Chinnakadai Street, Tiruchirapalli.-2. |

I, T. S. ISWARAN. hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Dated : 7—3—1970. Signature of Publisher ; (Sd). T. S. ISWARAN.

# ஸஹஸ்ரயோகம்

(முன் தொடர்ச்சி)

918. 30 மிலிலிடர் முலைப்பாலில் வெகுநாள் மருந்து அரைத்த கல்வத்தில் இருக்கும் மேல்பொருக்குகளைச் சேர்த்து சந்தனக்கல்லில் 1 கிராம் முத்தும், பவழமும், அரைத்துசேர்த்துப் பிறகு 2 கிராம் கலைமான்கொம்பும் அரைத்துச் சேர்த்து கழற்சிக் காயளவு வெண்ணெயுடன் கலந்து சிறுசுண்டைக்காயளவு நாக்கின் அடியில் தேய்த்துப் பிறகு எல்லா சந்துகளிலும் தேய்க்கவும். இவ்விதம் மூன்று நாள் தேய்க்க எல்லா ஸன்னி பாதங்களும் தீரும்.

919. ஸன்னிபாதத்தில் நினைவுபோய் மூர்ச்சையேற்பட்டால் பரீக்ஷைகள். கரளகம் (தமிழில் உறிகட்டி) இதை சமூலம் கொண்டுவந்து இடித்துப்பிழிந்த ரஸத்தை வலதுமூக்கில் நஸ்யம் செய்யவும். ஸ்திரீகளுக்கு இடது மூக்கில் நஸ்யம் செய்யவும். இவ்விதம் செய்தால் கண் திறந்து பார்த்தாலும் தலைபுரட்டிக் கொடுத்தாலும் மறுபடியும் சிகித்ஸை செய்வதால் வியாதி தீரும். (இந்த மூலிகை தமிழ் தேசம் மலையாளம் இவ்விடங்களில் சாதாரணமாகக் கிடைக்கக்கூடியது. பச்சையாகவே கிடைக்கும் பொழுது அதை உபயோகித்தால் அதிகம் குணம் ஏற்படும். உறிக்கட்டிக்கொடியை எடுத்துச் சுலபமாக உபயோகித்து மூர்ச்சை முதலிய வியாதிகளில் குணம் காணலாம்.)

920. மூர்ச்சையில் மறுபடியும் பரீக்ஷை: உறிக்கட்டி (கரளகத்தின்) வேர் எடுத்து இடித்து முசல் முட்டை சேர்த்து அரைத்துக்கண்ணில் அஞ்சனம்செய்ய ஜீவன் இருந்தால சிவப்பு ஜலம் வரும். ஜீவன் இல்லாமல் பிணமாக இருந்தால் வெள்ளை ஜலம் வரும். செத்துப்போனவர்களைப் பரீக்ஷிக்க இது மிகவும் உபயோகமான வழி. (இம்மூலிகை சுலபமாகக் கிடைத்தும் நம் நாட்டில் இதன் உபயோகம் அதிகமாகத் தெரியாமல் போனது நமது துரதிர்ஷ்டம். இதை மலையாளத்தில் மிகச் சிலாக்கியமாக விஷவைத்தியர்கள் உபயோகித்து எல்லா விஷங்களையும் நிவர்த்தி செய்து வருகின்றார்கள். நாய் விஷம் முதலிய கடின விஷங் களுக்குக்கூட இதனால் பூர்ணமாக குணம் ஏற்படுவதாகத் தெரிகிறது சிலந்தி விஷம் சொரிசிரங்குகள் முதலியவற்றிற்குச் சாதாரணமாக இந்தக்கொடியை அரைத்துத் தேய்த்து ஸ்நானம் செய்வது குடும்ப வைத்திய சம்பிரதாயம். இது ஓர் சித்த மூலிகை.)

---

# PURI BROTHERS (REGD.)

**Musk, Saffron and Indian Drugs Merchants**

## JULLUNDUR-1

Tele : " VENKATESH "  Phone : **3923**

**PRICE LIST FOR 1970**

| | Rs. P. |
|---|---|
| Pure Musk per gram | 35-00 |
| Pure Saffron ,, | 1-75 |
| Pure Gorochanam ,, | 9-00 |
| Pu.e Pearls special ,, | 10-00 |
| Pure Pearls No, 2. ,, | 8-00 |
| Pure Pearls No. 3. ,, | 6-00 |
| Pure Amber No. 1 per gm | 4-00 |
| Pure Amber No. 2 ,, | 3-50 |
| Pure Amber No. 3 ,, | 3-00 |
| Pure Amber Black ,, | 1-00 |
| **PACHAKARPURAM** | |
| Spl. Bhimseni per gram | 0-25 |
| Singapuri (Yellow) ,, | 0-20 |
| German or Japan | 0-20 |
| Ashtavargam per Kilo | 14-00 |
| Jiwak Rishwak ,, | 2-50 |
| Meda Mahameda ,, | 8-00 |
| Kakoli Kashir Kakoli ,, | 14-00 |
| Ridhi Vridhi ,, | 12-00 |
| Suryatapi Silajit No. 1 per Kilo | 100-00 |
| No. 2. ,, | 85-00 |
| **BHASAMS** | |
| Rajit Bhasam per K. G. | 1000-00 |
| Tamber Bhasam ,, | 220-00 |
| Abhrak (100 times) ,, | 230-00 |
| Abhrak (60 times) ,, | 160-00 |
| Bang Bhasam ,, | 160-00 |
| Akik Bhasam ,, | 50-00 |
| Shilajit ,, | 30-00 |
| Annabedi Bhasam ,, | 30-00 |
| Swaran Makshika ,, | 60-00 |
| Nag Bhasam ,, | 120-00 |
| Pearl Bhasam per ten gram | 100-00 |
| Parda Bhasam ,, | 10-75 |

| | Rs. P. |
|---|---|
| Hingul Bhasam per ten gm. | 10-75 |
| Loh Bhasam (special) per K. G. | 130-00 |
| Loh Bhasam No. 1 ,, | 75-00 |
| Mandur Bhasam ,, | 30-00 |
| Sankh Bhasam ,, | 30-00 |
| Shring Bhasam ,, | 30-00 |
| Vaikrant Bhasam ,, | 180-00 |
| Hartal Godanti ,, | 30-00 |
| Kant Loh Bhasam ,, | 250-00 |
| Parwal Bhasam ,, | 175-00 |
| **PILLS (GUTTIKA)** | |
| Agnitundi Vati per ten gm. | 1-00 |
| Basant Kushmakar ,, | 50-00 |
| Chander Odya Ras ,, | 40-00 |
| Sanjeevani Vati ,, | 6-00 |
| Eladi Vati per K. G. | 35-00 |
| Echha Bhedi Ras ,, | 60-00 |
| Kaf Ketu Ras ,, | 50-00 |
| Kan Kayan Vati ,, | 45-00 |
| Khadi Radi Vati ,, | 45-00 |
| Lavangadi Vati ,, | 120-00 |
| Mritunjaya Ras ,, | 125-00 |
| Mandur Vati ,, | 40-00 |
| Sankh Vati ,, | 50-00 |
| Shul Gaj Kesar Vati ,, | 80-00 |
| Nityodit Ras ,, | 125-00 |
| Chander Prabha Vati | 60-00 |
| Maha Jograj Guggal ,, | 110-00 |
| Jograj Guggal ,, | 35-00 |
| Kishore Guggal ,, | 33-00 |
| Kanchanar Guggal ,, | 35-00 |
| Raj Parsadani Vati 30 pills | 1-00 |
| Mridu Virechan 1000 ,, | 16-00 |
| Leucorhin 1000 ,, | 50-00 |
| Kasari Pills 1000 ,, | 30-00 |

5% Commission will be allowed on all orders received direct by us

# இம்காப்ஸ்


## *ஆராய்ச்சியும் நிலையான வளர்ச்சியும்*

இம்காப்ஸின் கடந்த 25 ஆண்டுகால வளர்ச்சி நிலையான முன்னேற்றத்தின் அறிகுறி. மருத்துவத்துறையில் இந்த நிறுவனம் 1944-ம் ஆண்டு 224 அங்கத்தினருடன் கூட்டுறவு முறையில் சிறிய அளவில் தொடங்கப்பட்டது. இன்று இம்காப்ஸின் வசதிகள் நிறைந்த ஆராய்ச்சிப் பகுதி நம்நாட்டின் மருத்துவ மூலிகைகளின் பயனைக் குறித்து இடையருத ஆராய்ச்சி புரிந்து கொண்டு வருகிறது. மேலும் மருந்துகளைத் தயாரிக்கின்ற கூடமானது நவீன யந்திரங்களைப் பெற்றமையால் உற்பத்தியை பன்மடங்கு பெருக்கி, தரமானதும், தூய்மையானதுமான மருந்துகளை விரும்பும் பல லட்சக்கணக்கான மக்களின் தேவைகளை நியாய விலையில் பூர்த்தி செய்கிறது.

**IMPCOPS**

தி இந்தியன் மெடிகல்
பிராக்டிஷனர்ஸ்
கோவாப்பரேட்டிவ்
பார்மஸி & ஸ்டோர்ஸ் லிட்.,
அடையார், சென்னை-20

**கிளை அலுவலகங்கள்:**
சென்னை-2, மதுரை
தாடேபள்ளி (ஆந்திரப் பிரதேசம்),
விஜயவாடா, ஹைதராபாத், பெங்களூர்




**மருந்துகள் சென்னை "காமதேனு" விலும் மற்றும் பிரபலமான மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.**

வைத்ய வாசஸ்பதி

பண்டிட் P. S. ராமசர்மா அவர்களின்

நீண்ட கால பரீக்ஷை அனுபவத்தினால்

கண்டுபிடிக்கப்பட்ட கை கண்ட பலனளிக்கும்

# "சக்தி சஞ்ஜீவி"

(REGD.)

குழந்தைகளுடைய ஈரல் குலைக்கட்டிகளை

எங்கிலேயிலும், போக்குவதிலும்,

வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்

எங்கும் கிடைக்கும்.

★

தயாரிப்பவர்:

## சக்தி விலாஸ வைத்தியசாலா

கரூர். (S. Ry.)


Edited by Vaidya Vachaspati Pandit P. S. Rama Sarma. Published by Dr. T. S Iswaran, L.I.M., on behalf of the Tamilnad Ayurveda Mahamandalam at 27, Chinnakadai Street, Tiruchirapalli-2 Printed at Githa Press. Tiruchirapalli-2.